







கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற பிறகு அவரது ஆட்சியின் செயல்பாடுகளை பார்த்து பல்வேறு மாற்று கட்சிகளை சேர்ந்தவர்கள் தொடர்ந்து தி.மு.க.வில் இணைந்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம், தர்மபுரம் மற்றும் பழவிளை பகுதியை சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் ஏ.சுரேந்திரகுமார், கே.ஐயப்பன், எ.எல்டபோன்ஸ், ஜெ.மிலன் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## தஞ்சை செழிக்கட்டும்!

# உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்!

### கல்லணை திறப்பு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னைன, ஜீன் 16 -**

**"பொன்னி நதியால் தஞ்சை செழிக்கட்டும்! உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லணை திறப்பு குறித்து தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

*காவிரி டெல்டா பாசனத்திற்காக கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்ட பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-*

**“காடுகொன்று நாடாக்கிக் குளந் தொட்டு வளம்பெருக்கிப் பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி” எனப் பட்டினப்பாலை பாடும் கரிகாற்பெருவளத்தான் உருவாக்கிய கல்லணையில் நீர் திறக்கப்பட்டது!**

**பொன்மணியென நெல்மணி விளைந்திடப் புறப்பட்ட பொன்னி நதியால் தஞ்சை செழிக்கட்டும்! உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்!**

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

## தி.அ.முகமது சகி தலைமை! ஏ.பி.நந்தகுமார் முன்னிலை!

# வேலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம்!

### கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் ஆலோசனை வழங்கினார்!

வேலூர், ஜூன் 17 –

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் செயற்குழு அவசரக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடந்தது.மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

இதில் கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் வேலூர் மாவட்டம் வருகை குறித்து ஆலோசனை வழங்கினார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாவட்ட பொருளாளர் நரசிம்மன், மாவட்ட துணை செயலாளர் டாக்டர் பிரபாத் குமார் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், வேலூர் ரமேஷ், சேர்க்காடு

கென்னடி, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் என்.சுப்பிரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.கதிரேசன்,மா.ப.அன்பு

நிதி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக பகுதி செயலாளர்கள் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :

குஜராத் மாநிலம், அஹமதாபாத்தில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த மாபெரும் கோர விமான விபத்தில் தன்இன்னுயிர் நீத்த அத்தனை ஆன்மாக்களும் அமரத்துவம் அடைந்திடவும், விபத்தில் உயிர் நீத்தோரின் அத்தனை குடும்பங்களுக்கும் ஆறுதலை தெரிவித்து வேலூர் மாவட்ட திமுக சார்பில் தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களை ஆளும் முதல்வர்களில் முதன்மையான முதல்வராக திகழும் திராவிட மாடல் முதல்வர், கழகத்தலைவர் தளபதி அவர்கள் வரும் 25.06.2025 அன்று வேலூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சியில் முற்பகல் 11.00 மணிக்கு காட்பாடி ரயில் நிலையத்திற்கு வருகை தந்து வேலூர் பெண்ட்லன்ட் மருத்துவமனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு மருத்துவமனை, காட்பாடி சேர்க்காட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாலுகா மருத்துவமனை மற்றும் குடியாத்தம் தாலுகா மருத்துவமனை ஆகியவற்றை திறந்து வைத்து வேலூர் விருந்தினர் மாளிகைக்கு செல்ல உள்ளார்.

அதுசமயம் காட்பாடி ரெயில் நிலையத்தில் இருந்து வேலூர் விருந்தினர் மாளிகை வரை கழக இருவண்ணக் கொடி மற்றும் தோரணங்கள் அமைத்து வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சி மிகு வரவேற்பு அளித்து வரவேற்றிட மாவட்டதிற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் அணிதிரள வேண்டுமாய் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி கெங்கநல்லூரில் 25.06.2025 அன்று அணைக் கட்டு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் அறிவாலயம் மற்றும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் வெண்கல சிலையை திறந்து வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் தளபதி அவர்களை அணைக் கட்டு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் வருக வருக என வரவேற்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இந்தியா என்பது மாபெரும் பன்முக தன்மை கொண்ட கலாச் சார நாடாகும். சாதி மதம் பேதம் கடந்து தமிழ்நாட்டில் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் இந்த வேளையில் ஒன்றியத்தில் ஆளும் பாசிச பா.ஜ.க., அதன் தாய் அமைப்பான RSS பஜ்ரங்தள் போன்ற வகுப்பு வாத மதவாத சக்திகளின் பிரித்தாளும் கயமை அரசியலை தமிழகத்தில் விதைத்து அதன் மூலம் சாதி, மத பேத வெறுப்பு அரசியலை முன்னெடுக்கும் மக்கள் விரோத பா.ஜ.க. செயல்பாடுகளை வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கடுமையான கண்டனத்தை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலை தமிழுக்கு எதிராகவும், தமிழர் நலனுக்கு மாறாகவும், தமிழ்நாட்டிற்கு கேடுவிளைவிக்கும் ஜனநாயக சமத்துவத்திற்கு எதிராக பாசிச பா.ஜ.க.வோடு கைகோர்த்து தமிழகத்தில் மக்கள் விரோத அரசை அமைப்பதில் முனைப்பு காட்டுபவர்களுக்கு எதிரான அத்தனை தமிழர்கள் விரோத கூட்டணியை திராவிட மாடல் அரசின் அசாத்திய முதல்வர் கழகத்தலைவர் அவர்கள் நிகழ்த்தி காட்டியுள்ள மக்கள் நலன் மற்றும் தாய் மொழி தாய்நாடு உயர்வுக்கான பலமுற்போக்கு நல்திட்டங்களை எடுத்துகூறி அனைத்து தொகுதிகளிலும் பெருவாரியான வாக்குகளை பெற்று இனஎதிரிகளை தோற்கடித்து வெற்றிபெற இன்றே ஆயத்தமாவோம் என அனைத்து நிர்வாகிகளையும் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை கணபதி ராமசுப்பையா

### ஜூன் 17 (2006)



கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் ‘தனது தலைவர் கலைஞர்தான்’ என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**